



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387 உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்

ANANDA BHASKAR www.anandabhaskar.com





சென்னை மலர்: 01 இதழ்: 154 29.11.2025 சனிக்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 154 ▸▸Saturday ▸▸pages 4 ▸▸Rs.5/-

## இன்றைய நாள்

சனிக்கிழமை
(29-11-2025)
விசுவாவசு ஆண்டு, கார்த்திகை-13

பிறை: வளர்பிறை

திதி
நவமி மாலை 6.03 வரை
பிறகு தசமி.

நட்சத்திரம்:
பூரட்டாதி இரவு 10.07 வரை
பிறகு உத்திரட்டாதி

யோகம்
மரண/சித்தயோகம்

ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி.

எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி.

சூலம் –கிழக்கு.

நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6

| | |
|---|---|
| மேஷம் | பயணம் |
| ரிஷபம் | நிம்மதி |
| மிதுனம் | புகழ் |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | உழைப்பு |
| துலாம் | உதவி |
| விருச்சிகம் | நலம் |
| தனுசு | கண்ணியம் |
| மகரம் | சுகம் |
| கும்பம் | இன்பம் |
| மீனம் | சுபம் |

# டிட்வா புயல்: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தயார்

## முதல்வர் மு.க. ஸ்டாலின் பேட்டி

**சென்னை,நவ.29:**

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு வங்கக்கடல், அதை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, 'டித்வா' புயலாக வலுப்பெற்று, சென்னைக்கு 540 கி.மீ தூரத்திலும், புதுச்சேரிக்கு 440 கி.மீ தெற்கு தென்கிழக்கு திசையிலும் தற்போது நிலைகொண்டு இருக்கிறது. இது மணிக்கு 10 கி.மீ வேகத்தில் வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது.

இதன் காரணமாக தஞ்சை, நாகை உள்ளிட்ட 4 மாவட்டங்களுக்கு இன்று அதிகனமழைக்கான 'ரெட் அலர்ட்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சென்னையில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் முதல்வர் ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழகத்தின் தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் கடுமையான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் ஆட்சியர்களிடம் காணொலி மூலம் தொடர்பு கொண்டு பேசிவருகிறோம்.





நேற்று என்னுடைய தலைமையில் இது தொடர்பாக கூட்டத்தை கூட்டி எச்சரிக்கை விடுத்துள்ளோம். அனைத்து மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அதிகாரிகளை அனுப்பி வைத்துள்ளோம். ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பகுதிகளை உஷாராக கவனிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம். சென்னையிலும் அதிக மழைப் பொழிவு இருக்கும் என்று சொல்கின்றனர். எல்லா இடங்களிலும் முகாம்கள், உணவுப் பொருட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்வான பகுதிகளில் இருக்கும் மக்களை அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட அமைச்சர்களும் நிலைமையை கவனமாக கண்காணித்து வருகின்றனர். டெல்டா மாவட்ட மக்கள் வஞ்சிக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி சொல்கிறார். அவர் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருப்பார். அப்படியெல்லாம் எதுவும் கிடையாது. அவருக்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை". இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

## விரைந்த பேரிடர் மீட்புக் குழு!



அரக்கோணம்: டிட்வா புயல் கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில பேரிடர் மேலாண்மை அதிகாரிகளின் வேண்டுகோளை அடுத்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 6 மாவட்டங்களுக்கு தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர்.

ஒவ்வொரு தேசிய பேரிடர் மீட்புக் குழுவுக்கும் 30 பேர் வீதம் மொத்தம் எட்டு குழுக்கள் அரக்கோணத்தில் இருந்து புறப்பட்டுள்ளனர். புதுச்சேரிக்கு இரண்டு குழுக்கள் (60 பேர்), தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கூடுதலாக, இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மக்களைக் கண்டுபிடித்து காப்பாற்ற உதவும் வகையில் மோப்ப நாய்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் ராணி, மிக்கி, லைக்கா மற்றும் ராம்போ ஆகிய நான்கு பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நாய்கள் பேரிடர்களின் போது இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மக்களைக் கண்டுபிடித்து காப்பாற்றுவதற்கு மீட்புக் குழுவினருக்கு உதவுகின்றன.

இதற்கிடையே, கடந்த 6 மணி நேரத்தில் 7 கி.மீ. வேகத்தில் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வரும் டிட்வா புயல், தற்போது புதுவையிலிருந்து தெற்கு - தென்கிழக்கே 440 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து தெற்கு- தென்கிழக்கே 540 கி.மீ. தொலைவிலும் 10 கிமீ வேகத்தில் நகர்ந்து வருகிறது.

பலத்த காற்று மற்றும் மிக அதிக மழை பெய்யும் சாத்தியம் கொண்ட இந்த புயல் ஞாயிற்றுக்கிழமை (நவ. 30) அதிகாலை வட தமிழ்நாடு, புதுச்சேரி, அதையொட்டிய தெற்கு ஆந்திரம் கடற்கரைகளுக்கு அருகில் தென்மேற்கு வங்கக்கடலில் கரையைக் கடக்கும் என தெரிவித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், கடலோர மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், ஞாயிற்றுக்கிழமை சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மாவட்டங்களில் பலத்த மழை முதல் மிக பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளது.

## 2026ல் ஆட்சி பீடத்தில் விஜய்! தவெகவில் இணையும் அதிமுகவினர்?



**சென்னை,நவ.28:**

2026ல் மக்கள் சக்தியால் தவெக தலைவர் விஜய் ஆட்சி பீடத்தில் அமர்வார் என தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன்கூறியுள்ளார்.

தவெகவில் இணைந்ததையடுத்து எம்ஜிஆர், ஜெயலலிதா மற்றும் விஜய் படங்களுடன் அவரது கோபிசெட்டிபாளையம் அலுவலகத்தில் புதிய பேனர் வைக்கப்பட்டுள்ளது. தனது வாகனத்தில் தவெக கட்சி கொடியையும் மாற்றியுள்ளார்.

பின்னர் சென்னையில் செய்தியாளர்களுடன் பேசிய அவர்,

"கட்சித் தலைவரோடு விரைவில் கலந்துபேசி சுற்றுப்பயணம் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து முடிவெடுக்கப்படும்.

தமிழகத்தை புதிய இயக்கம் ஆள வேண்டும் என மக்கள் நினைக்கிறார்கள். மக்களால் நேசிக்கப்படுகிற தலைவர், புதிய ஆட்சி வர வேண்டும் என்ற நோக்கில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்.

2026 மக்கள் சக்தியால் ஆட்சி பீடத்தில் அமர்கிற காலம் உருவாகும்.

அதிமுகவில் இருந்து யார், யாரெல்லாம் தவெகவில் இணைவார்கள் என்று இப்போது கூறினால் பிரச்னை வரும்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை உருவாக்கி விஜய்யின் தலைமையில் இந்த தமிழகம் வெற்றி நடை போடுவதற்கு அயராது உழைப்பேன்" என்று கூறியுள்ளார்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம்

**சென்னை,நவ.29:**

வருகிற 9-ந்தேதி முதல் ஜனவரி 8-ந்தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

* சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கான கணக்கீட்டு படிவங்களை பெற்றுக்கொண்ட வாக்காளர்கள் தங்கள் படிவங்களை உடனடியாக பூர்த்தி செய்து, கடைசி நேர நெருக்கடியை தவிர்க்க வரும் 4-ந்தேதி வரை காத்திருக்காமல் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் அல்லது உதவி மையத்தில் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும். கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைத்துள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் 9-ந்தேதி அன்று வெளியிடப்படவுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும்.

* 2002 மற்றும் 2005 வாக்காளர் பட்டியலில் ஒரு வாக்காளர் தனது பெயர் அல்லது உறவினரின் பெயரை கண்டறிய இயலாத நிலையில் 4-ந்தேதிக்குள் பிற விவரங்கள் நிரப்பப்பட்ட கணக்கீட்டு படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒப்படைத்தால், அந்த வாக்காளரின் பெயர் 9-ந்தேதி வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். ஆனால் கணக்கீட்டு படிவத்தை சமர்ப்பிக்காத பட்சத்தில், அந்த வாக்காளரின் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது.



* மூன்று முறை வீடு தேடி சென்றும் கணக்கீட்டு படிவம் வழங்க முடியாத வாக்காளர்களின் பெயர்கள், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது.

இதையும் படியுங்கள்: மு.க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சர் பதவியில் நீடிக்க வேண்டும்- நடிகர் சிவகுமார்

* வரைவு வாக்காளர் பட்டியலில் ஒரு வாக்காளரின் பெயர் இல்லையெனில், உரிமைக்கோருதல் காலத்தில் படிவம் 6-உடன் உறுதிமொழிப் படிவத்தை இணைத்து அவரது பெயரை புதியதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

* உரிமை கோரல் காலம் டிசம்பர் 9-ந்தேதி முதல் ஜனவரி 8-ந்தேதி வரை நடைபெற உள்ளது. அப்போது வாக்காளர்கள் பெயர் சேர்க்க, நீக்க மனு கொடுக்கலாம். மேலும் வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுக்கு அந்த சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலில் வாக்காளராக பதிவு பெற்றவர் எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

* அறிவிப்புக் காலம் வருகிற 9-ந்தேதி முதல் ஜனவரி 31-ந்தேதி வரை நடைபெறும். இந்த காலகட்டத்தில் வாக்காளரின் தகுதியை ஆய்வு செய்த பிறகு தேவையானால் வாக்காளர் பதிவு அலுவலரால் அந்த வாக்காளர்களுக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, விசாரணை நடத்தப்படும்.

* வாக்காளரின் அனைத்து உரிமைகோரல்கள் மற்றும் மறுப்புரை பரிசீலிக்கப்பட்ட பின், இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 7-ந்தேதி வெளியிடப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உயிரிழந்த 2 கோடி பேரின் ஆதார் எண்கள் நீக்கம்

**புதுடெல்லி,நவ.29:**




ஆதார் தரவுத்தளத்தின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் வகையில் தேசிய அளவில் தூய்மைப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, இறந்த 2 கோடி நபர்களின் ஆதார் எண்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில், 'மை ஆதார்' இணையதளத்தில் 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரேதசங்களை சேர்ந்த ஆதார் அட்டைதாரர்கள் குடும்ப உறுப்பினரின் மரணத்தைப் பதிவு செய்யலாம்.

எஞ்சியுள்ள மாநிலங்களையும் 'மை ஆதார்' தளத்தில் ஒருங்கிணைப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்று இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) தெரிவித்துள்ளது.






## இந்திய பகுதிகள் அடங்கிய வரைபடத்துடன் ரூபாய் நோட்டு- நேபாளத்தின் செயலால் அதிர்ச்சி

**புதுடில்லி,நவ.29:**

உத்தரகாண்ட் எல்லையில் அமைந்துள்ள இந்திய பகுதிகளான காலாபனி, லிபுலேக் மற்றும் லிம்பியாதுரா பிராந்தியங்களை நேபாளம் சொந்தம் கொண்டாடி வருகிறது. கடந்த 2020-ம் ஆண்டு நேபாளத்தின் அப்போதைய கே.பி.சர்மா ஒலி அரசு, இந்த பகுதிகளை இணைத்து வரைபடம் வெளியிட்டது. இதை அந்த நாட்டு பாராளுமன்றமும் பின்னர் அங்கீகரித்தது.



இதற்கு அப்போது இந்தியா கடும் எதிர்ப்பை பதிவு செய்தது. ஒருதலைப்பட்சமான இந்த நடவடிக்கையை ஏற்க முடியாது என நேபாளத்துக்கு எச்சரிக்கையும் விடுத்தது.

தற்போது இந்த பகுதிகளை உள்ளடக்கிய வரைபடத்துடன் புதிய 100 ரூபாய் நோட்டுகளை நேபாளம் வெளியிட்டு உள்ளது. நேபாள ராஷ்டிர வங்கி வெளியிட்டுள்ள இந்த ரூபாய் நோட்டுகளால் இந்த விவகாரம் மீண்டும் பூதாகரமாகி இருக்கிறது. நேபாளத்தின் இந்த நடவடிக்கை இந்தியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.




## திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்யநாராயணர் சிறப்பு வழிபாடு






**கடலூர், நவ.29:**

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் ஸ்ரீ வாசவி மஹாலில் திருவோணம் நட்சத்திரத்தை முன்னிட்டு சத்தியநாராயண பூஜை நடைபெற்றது. ஸ்ரீசத்திய நாராயணருக்கு வண்ணமலர் மாலைகளுடன், துளசி மாலைகளுடன் வேத மந்திரங்கள் ஒலிக்க, ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாரதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ சத்யநாராயணரை வேண்டி அருள் பெற்றனர். பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திரு கார்த்திகை தீபத் திருவிழா 5-ஆம் நாள் காலை உற்சவம்





**திருவண்ணாமலை, நவ.29:**

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் கார்த்திகை தீபத் திருவிழா முன்னிட்டு திருக்கோவில் 5-ஆம் நாள் உற்சவம் காலை கண்ணாடி ரிஷப வாகனத்தில் விநாயகர் மற்றும் ஸ்ரீ சந்திரசேகரர் மாட வீதி உலா நடைபெற்றது ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மானாமதுரையில் சத்ய சாய்பாபா நூற்றாண்டு விழா







**மானாமதுரை, நவ .29:**


சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில் நிலையம் முன்பு உள்ள சர்வ சமய பிராத்தனை மண்டபத்தில் புட்டபர்த்தி பகவான் சத்தியசாய்100வது பிறந்ததினவிழா நடைபெற்றது. மானாமதுரை கன்வீனர் ராஜாராம் வரவேற்றார்.

மாவட்டதலைவர் சுவாமி நாதன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.காலை 8.மணிக்கு நகர் சங்கீர்தனம் தொடங்கி முதல்.பகல்12. மணிவரை சாய்பஜன், பால விகாஸ் நிகழ்ச்சி,சத்சங் உரை மற்றும் மங்கள ஆரத்தி நிகழ்ச்சியுடன் நடைபெற்றது.

பாபா கல்வி நிறுவனங்கள் நிறுவனர் ராஜேஸ்வரி அம்மா, தொழில் அதிபர் ஏஆர்பி. முருகேசன் ஆகியோர் சேவை செய்த மகளீர்களுக்கு புடவைகள் வழங்கினார்கள்.

விழாவில் ஏராள மான பக்தர்கள் ரயில்வே ஊழியர்கள் கலந்து கொண்டனர். விழாவில் நாராயண சேவை எனப் படும் அன்னதானம் அனைவருக்கும் வழங்கப்பட்டது .

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்









மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்திருக்கோயில் நேற்று 28.11.2025 திருக்கார்த்திகை தீபத்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம். இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான் மறந்தும் பிறவா வரம் தா - சிறந்தபுகழ் ஞாலவாயா முடிக்கு நாட்டுஞ்சூளாமணியாம் ஆலவாய்ச் சொக்கநாதா-சொக்கநாதவெண்பாசொக்கே நின் தாளே துணை

## கீதா ஜெயந்தி விழா அழைப்பிதழ்



**தஞ்சாவூர்,நவ.29:**

கீதா ஜெயந்தி விழா அழைப்பிதழ் அன்புடையீர், வணக்கம் நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 14ஆம் நாள் 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று வளர்பிறை மோட்சய ஏகாதசி திதி. மாலை 3.30 மணிக்குமேல் 6.00 மணிக்குள் தஞ்சாவூர், மகர்நோம்புச்சாவடி, ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் வளாகத்தில் முதலாம் ஆண்டு ஆயிரம் மனங்களுடன் இணைந்து கீதா பாராயணம் செய்வோம் வாரீ! வாரீர்!! நிகழ்ச்சி நிரல் : திருவிளக்கு ஏற்றுதல் : ஸ்ரீபதி. K.G.பிரேமா கோவிந்தராமன் அவர்கள் வரவேற்பரை: ஸ்ரீமதி. S.மீனாக்ஷி அவர்கள், ஜோதிடர். தஞ்சாவூர் தலைமை மற்றும் முன்னிலை- திரு. B.S.சேஷாத்திரி அவர்கள் ஸ்ரீ பிரசன்னவெங்கடேசப்பெருமாள் திருக்கோயில் பரம்பரை நிருவாக அறங்காவலன் ஆசியுரை: திரு. இல.குணசேகரன் அவர்கள், ஜோதியர், எழுத்தாளர். நிறுவனர்:உளிகள் அமைப்பு மற்றும் பாரதமாதா சடை, தஞ்சாவூர். சிறப்புரை: திரு. R.ரெங்க ராஜன் அவர்கள், ஆயை அர்ச்சகர், வீர ஆஞ்சநேயர் திருக்கோயின், மோத்தரப்பசாவடி தஞ்சாவூர். கீதா பாராயணம்: திரு.D.K.கேசவராமானுஜதாசன் அவர்கள் பிரபந்த பாராயண பயிற்றுனர் கீதா அரத்தி: ஸ்ரீ ஆண்டாள் மாதர் சங்கம் குழுவினர் நன்றியுரை: திரு. M.R.K.ராஜா அவர்கள், மாவட்ட செயலாளர், அறம் வளர்த்த நாயகி சேவை மையம். தஞ்சாவூர் பக்தகோடி பெருமக்களும், ஆன்மீக மெய்யன்பர்களும் இவ்விழாவில் தவறாது குடும்பம்பத்துடன் கலந்துக்கொண்டு பகவானின் அருளைபெற அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், பரம்பரை நிர்வாக அறங்காவலர் மற்றும் அறம் வளர்த்த நாயகி சேவை மையம் தஞ்சாவூர்.

**செய்தி:தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## தமிழ் மாநில காங்கிரஸ் 12 ஆம் ஆண்டு விழா



**தஞ்சை,நவ.29:**

தமிழ் மாநில காங்கிரஸ் 12 ஆம் ஆண்டு விழா தஞ்சை மத்திய மாவட்டம்,மாநகர்மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் மாவட்ட அலுவலகத்தில். மாநகர தலைவர் வெங்கட்ராமன் தலைமையில் மாநில செயலாளர சிவ! முரளிதரன், இனை செயலாளர் ஏ. ராம் மோகன் முன்னிலையில் நடை பெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக மாநில செயற்குழு உறுப்பினர்கள் பி. எல்! ஏ. சிதம்பரம், என், ஆர். நடராஜன் ஆகியோர் கலந்து கொன்டு கொடியேற்றி இனிப்பு வழங்கினார்கள்.

மாவட்ட துணை தலைவர். ஜி. அன்பழகன், மாவட்ட பொது செயலாளரும் செய்தி தொடர்பாளருமான கோவி. மோகன், மாவட்ட பொது செயலாளர் கே. உலகநாதன், மாவட்ட பொருளாளர் ராஜா, மாவட்ட இளைஞரணி தலைவர் ஜெகதீஷ்.

மாவட்ட செயலாளர்கள். கிருஷ்ணமூர்த்தி.கே.டி..அய்யாறு. வட்டார தலைவர். அலெக்ஸ். மாவட்ட மாணவர் அனி தலைவர் பிரவின்.. பகுதி தலைவர். காசிநாதன். அருள் சாமி. மீனாட்சி சுந்தரம். என். ராஜேந்திரன். ராஜ வேல். மரிய பிரகாசம். சுயம் பிரகாசம். சரவணன், அருள். சுயம் பிரகாசம். உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்

## பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்த டி.எஸ்.பி.யிடம் சி.பி.ஐ. விசாரணை



**கரூர், நவ.29:**

கரூர் வேலுசாமிபுரத்தில் விஜய் பிரச்சார கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கி சி.பி.ஐ. அதிகாரிகள் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரிவு பொறுப்பாளர் ஆதவ் அர்ஜுனா, இணைச் செயலாளர் நிர்மல் குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன், கரூர் மாநகர பொறுப்பாளர் பவுன்ராஜ் ஆகியோரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் தொடர்ந்து 2 நாட்கள் விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் இன்று காலை நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 3 பேர் குடும்பத்தினர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். தொடர்ந்து விஜய் வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்த கரூர் டி.எஸ்.பி. செல்வராஜ் சிபிஐ அதிகாரிகள் முன்பு விசாரணைக்கு ஆஜர் ஆனார். அவரிடம் அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை முன்வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### திருப்புவனத்தில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் பொதுமக்களுக்கு போர்வைகள் வழங்கினார்



**சிவகங்கை, நவ.29:**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மேற்கு ஒன்றிய திமுக மற்றும் பேரூர் கழக திமுக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த தினத்தை முன்னிட்டு 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் தலைமையில் பேரூர் கழகச் செயலாளர் நாகூர்கனி. முன்னிலையில் குளிர்காலத்தை முன்னிட்டு முதியோர் களுக்கு போர்வைகள் மாவட்ட கழக துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் வழங்கினார். மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.


இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை. நகர் இளைஞர் அணி அமைப்பாளர் கண்ணன். ஒன்றிய இளைஞரனி அமைப்பாளர் அறிவுகரசு. ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள். காளிதாஸ். கணேஷ் பிரபு .திருப்பதி. முத்துக்குமார். வேல்முருகன். பிரசாத். எஸ.ஏ.காளிதாஸ். கணேசன். செய்திருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்: பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட பிரதிநிதிகள். ராமலிங்கம்.சுப்பையா. ஈஸ்வரன். பாலகிருஷ்ணன். திருநாவுக்கரசு. ஒன்றிய கழக நிர்வாகிகள். ரவி. மகேந்திரன். ராமு. இளங்கோவன். மீனாட்சி சுந்தரம். ராஜ்மோகன். கெங்குராமன். தொண்டரணி ராஜா. மீனவரனி அண்ணாமலை. மாணவரனி அமைப்பாளர்கள். பாண்டியர்கிருஷ்ணன். கிஷோர். கவுன்சிலர்கள். மாரிதாஸ். வேல்பாண்டி. சித்ராதேவி ஆறுமுகம். பத்மாவதி முத்துக்குமார். ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பழையனூரில் ஒன்றிய செயலாளர் சுப்பிரமணிய தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு போர்வைகளை இனிப்புகள் வழங்கப்பட்டன

## மு.க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சர் பதவியில் நீடிக்க வேண்டும்

### நடிகர் சிவகுமார்



**சென்னை, நவ.29:**

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நடிகர் சிவகுமார், ஓவியர் குருசாமி சந்திரசேகரன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனைக்கான மதிப்புறு முனைவர் பட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதையடுத்து விழாவில் நடிகர் சிவகுமார் பேசியதாவது:-

2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ந்தேதி முத்தமிழறிஞர் கலைஞர் நம்மை விட்டு மறைந்து விட்டார். அதே 2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25-ந்தேதி கோவை இந்துஸ்தான் பல்கலைக்கழக வளாகத்தில் அவருக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி நடந்தது.

திரைப்படத் துறையில் பல்வேறு கலைஞர்கள் கலந்து கொண்டார்கள். அந்த மேடையிலே பேசிய நான் நமது இன்றைய முதலமைச்சரை பார்த்து இன்று மஞ்சள் துண்டு போர்த்தப்பட்டு நாளை தமிழக முதலமைச்சராக போகின்ற அன்புச் சகோதரர் ஸ்டாலின் அவர்களே என்று குறிப்பிட்டு பேசினேன்.

அந்த வாழ்த்து பொய்யாகவில்லை. அடுத்த 3 ஆண்டுக்குள் 2021 ஏப்ரல் 7-ந்தேதி இதோ இங்கு முதலமைச்சராக நம்மிடையே வந்து அமர்ந்துள்ளார்.

தந்தையின் வழியிலே மிகச்சிறந்த ஆட்சியை நடத்தி கொண்டிருக்கிறார். அவருக்கு உங்கள் சார்பில் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருதை எனக்கு வழங்கிய இந்த பல்கலைக்கழகத்துக்கு இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெறாத ஒரு இளைஞன், சங்க இலக்கிய பாட்டுக்கு உரை எழுதி உள்ளார். அவரது வசனம் கற்பனையே பண்ண முடியாது. அந்த அளவுக்கு அமைந்துள்ளது.

அந்த இலக்கிய தாத்தாவுக்கு மகனாக பிறந்து இதோ மேடையில் இருக்கிற அவரது வாரிசு, இன்றைக்கு திறம்பட ஆட்சி செய்து காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், வீடுதேடி மருத்துவம் என்று எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி இன்று மக்களின் மனதில் நீங்காத இடத்தை பிடித்திருக்கிறார்.

இவர் மீண்டும் இந்த பதவியிலே நீடிக்க வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு சிவக்குமார் பேசினார்.

### ஸ்டிரைக் வாபஸ்..!

## மீண்டும் தொடங்கியது ஆம்னி பேருந்து சேவை



**சென்னை, நவ.29:**

சாலை வரி பிரச்சனை தொடர்பாக ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் வேலை நிறுத்தம் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், 18 நாட்களுக்கு பிறகு மாநிலங்களுக்கு இடையிலான ஆம்னி பேருந்து சேவைகள் மீண்டும் தொடங்கியுள்ளது.

போக்குவரத்துத்துறை அமைச்சர் உறுதிமொழியை அடுத்து ஸ்டிரைக் வாபஸ் பெற்றுள்ளதாக ஆம்னி பேருந்து சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு மீண்டும் பேருந்து சேவை தொடங்கியுள்ளது.

## பாராட்டு சான்றிதழ்



தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக நடத்தபட்ட உங்களுடன் ஸ்டாலின் ரீல்ஸ் மூலம் நடைபெற்ற போட்டியில் தமிழ்நாடு அளவில் முதல் இடம் பிடித்தார் R.M. பௌசியா பானு அவர்கள் அதற்கான வெற்றி பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களிடம் இருந்து பெற்றார்கள்.

## வளத்தி ஊராட்சியில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா




விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றிய திமுக சார்பில் வளத்தி ஊராட்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா இனிப்பு கொடுத்து அன்னதானம் வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்வில் ஒன்றிய சேர்மேன் கண்மணி நெடுஞ்செழியன் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஒன்றிய மாவட்ட முக்கிய நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா: நாக வாகனத்தில் சந்திரசேகரர் வீதிஉலா



**திருவண்ணாமலை, நவ.29:** திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 4-ம் நாளான நேற்று காலை 10 மணி அளவில் வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகரும், நாக வாகனத்தில் அம்பாளுடன் சந்திரசேகரரும் சிறப்பு அலங்காரத்தில் அருணாசலேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் எதிரே உள்ள 16 கால் மண்டபத்தில் எழுந்தருளினர்.

இதைத்தொடர்ந்து சாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து மேள தாளங்கள் முழங்க விநாயகரும், அதன் பின்னர் நாக வாகனத்தில் சந்திரசேகரரும் கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். மாட வீதிகளில் பக்தர்கள் தங்களின் வீடுகளின் அருகே சாமி வந்ததும் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

இரவு 10 மணியளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் வெள்ளி கற்பக விருட்சம், காமதேனு வாகனம் மற்றும் இதர வெள்ளி வாகனங்களில் எழுந்தருளி கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். மேலும் கோவில் கலையரங்கத்தில் பரதநாட்டியம், நாட்டுப்புற கலை நிகழ்ச்சி, பக்தி சொற்பொழிவு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தீபத்திருவிழாவின் போது சாமி வெள்ளி பெரிய ரிஷப வாகனத்திலும், வெள்ளி ரதத்திலும் எழுந்தருளி மாடவீதி உலா வருவது முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அதன்படி இன்று (வெள்ளிக்கிழமை) இரவு சாமி வெள்ளி பெரிய ரிஷப வாகனத்தில் எழுந்தருளுகிறார். தொடர்ந்து நாளை (சனிக்கிழமை) இரவு வெள்ளி ரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார். நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் நடைபெற உள்ளது.

## தூத்துக்குடியில் மகனை கத்தியால் குத்திய தந்தை கைது



**தூத்துக்குடி, நவ.29:** தூத்துக்குடி அண்ணாநகர் 3வது தெருவைச் சேர்ந்த துரைப்பாண்டி மகன் இசக்கிபாண்டி (வயது 42). இவரது மனைவி பரமேஸ்வரி. இந்த தம்பதிகளுக்கு சந்தோஷ்(17) என்ற மகனும் 2 மகள்களும் உள்ளனர். குடும்பத்தகராறு காரணமாக பரமேஸ்வரி கணவரை பிரிந்து, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு தனது குழந்தைளுடன் முத்தையாபுரம் காந்திநகர் 3வது தெருவில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று இரவு இசக்கிபாண்டி அவரது வீட்டுக்கு சென்று மனைவியிடம் என்னுடன் குடும்பம் நடத்த வா, இல்லை என்றால் உன்னை கத்தியால் குத்தி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி, கத்தியால் குத்த முயன்றார். அப்போது அவரை தடுக்க முயன்ற அவரது மகனுக்கு கையில் கத்தி குத்தியதால் காயம் ஏற்பட்டது.

இதில் காயம் அடைந்த சந்தோஷ் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில், முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) சண்முககுமாரி வழக்குப்பதிவு செய்து இசக்கிபாண்டியை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

## தூத்துக்குடி ஷிப்பிங் நிறுவனத்தில் கன்டெய்னரில் தீவிபத்து



**தூத்துக்குடி, நவ.29:** தூத்துக்குடி அருகே தட்டப்பாறை விலக்கு, செந்திலாம் பண்ணையில் தனியார் ஷிப்பிங் நிறுவனத்தில் இருந்த கன்டெய்னரில் இருந்து புகை வருவதாக சிப்காட் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று கன்டெய்னரை திறந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும் மாவட்ட அலுவலர் கணேசன் அறிவுரையின்படி கன்டெய்னரில் இருந்த பஞ்சு பேல்கள் வெளியே எடுக்கப்பட்டு பல மணி நேரம் போராடி தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. இதனால் தீ மேலும் பரவாமல் தவிர்க்கப்பட்டது. இதனையடுத்து தீவிபத்து குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த திடீர் தீவிபத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.




## சாட்சி சொல்ல வந்தவரை கொன்ற முதல் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை உறுதி

### மதுரை ஐகோர்ட் உத்தரவு

**மதுரை, நவ.29:** திருநெல்வேலி மாவட்டம்பாளையங்கோட்டை வட்டத்துக்கு உட்பட்ட பாளையஞ்செட்டிகுளத்தில் தேர்தல் முன்விரோதத்தால் 2016-ல் பெருமாள் என்பவரை, அதே பகுதியைச் சேர்ந்த செல்வராஜ் தரப்பினர் கொலை செய்ய முயன்றனர். இது தொடர்பான வழக்கு விசாரணை நெல்லை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கில், அதே ஊரைச் சேர்ந்த ராமசுப்பு மகன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் வைகுண்டம் என்பவர், செல்வராஜ் தரப்பினருக்கு எதிராக சாட்சியளித்தார்.

இதனால், வைகுண்டம் மீது செல்வராஜ் தரப்பினர் ஆத்திரமடைந்தனர். நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராக சாட்சி சொல்லக்கூடாது என தொடர்ந்து மிரட்டி வந்துள்ளனர். இருந்தபோதிலும் வைகுண்டம் செல்வராஜ் தரப்பிற்கு எதிராக சாட்சி அளித்துள்ளார்.

2022 மார்ச் 10-ந்தேதி பாளையஞ்செட்டிகுளத்தில் உள்ள கால்வாயில் வைகுண்டம் குளித்துக் கொண்டிருந்தார். அங்கு சென்ற செல்வராஜ் (43), அந்தோணி ராஜ் (எ) பிரபாகரன் (46), தேவதாஸ் என்பவரின் மகன்களான அருள் பிலிப் (31), அன்டோ நல்லையா (28), திரவியம் என்பவரின் மகன் பாபு அலெக்சாண்டர் (41), கோவில்பிச்சை என்பவரின் மகன் ராஜன் (70), ராஜன் மனைவியான லீலா (60), தேவதாஸ் மனைவி ஜாக்குலின் (59) ஆகிய 8 பேரும், வைகுண்டத்துடன் தகராறில் ஈடுபட்டனர். தகராறு முற்றியதில் வைகுண்டம் கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக பாளையங்கோட்டை தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து, செல்வராஜ் உள்ளிட்ட 8 பேரையும் கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை நெல்லை இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி சுரேஷ்குமார், குற்றம் சுமத்தப்பட்ட செல்வராஜூக்கு தூக்கு தண்டனையும், அந்தோணி ராஜ், அருள் பிலிப், அன்டோ நல்லையா, பாபு அலெக்ஸாண்டர் ஆகிய 4 பேருக்கு ஆயுள் தண்டனையும், ராஜன், செல்வலீலா, ஜாக்குலீன் ஆகிய மூவருக்கும் 2 மாதம் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

இந்தநிலையில் தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய கோரி ஐகோர்ட்டு மதுரை கிளையில் செல்வராஜ் உள்ளிட்ட ஐந்து நபர்கள் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள் நீதிபதிகள் வேல்முருகன் நீதிபதி விக்டோரியா கவுரி ஆகியோர் முன்பு விசாரணை நடைபெற்றது.

விசாரணையின் போது அரசு தரப்பில் தமிழ்நாடு அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் செந்தில்குமார் ஆஜராகி, நீதிமன்றத்தின் விசாரணையின் போது எதிரிகள் குற்றம் செய்ததற்கான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டு குற்றம் குற்றம் உறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில் செல்வராஜூக்கு தூக்கு தண்டனை மற்றும் மற்ற எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

எனவே குற்றவாளிகளின் தண்டனையை ரத்து செய்யக்கூடாது என வாதிட்டனர்.

இரண்டு தரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தனர். இந்நிலையில் இந்த வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், கீழமை நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்து மேல்முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்தனர்.

இதனால் செல்வராஜூக்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. மேலும் ஆண்டனி ராஜ் உள்ளிட்டோருக்கு வழங்கிய ஆயுள் தண்டனையும் உறுதி செய்யப்பட்டு உள்ளது.



## தினம் ஒரு குறள்

**அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.** - குறள் 147

క్రమము దప్పనట్టి గార్హస్థ్య ధర్మంబు
అన్య స్త్రీలఁ గవయ నట్టి దగును - కురల్ 147

**जो गृहस्थ पर-दार पर, होवे नहिं आसक्त ।
माना जाता है वही, धर्म-कर्म अनुरक्त ॥** - कुराल 147

Araniyalaan Ilvaazhvaan Enpaan Piraniyalaal
Penmai Nayavaa Thavan - Kural 147

## ‘சென்னை ஒன்’ செயலி மூலம் ரூ.1,000, ரூ.2000 மாதாந்திர மின்னணு பயண அட்டை பெறும் வசதி தொடக்கம்




**சென்னை, நவ.29:** சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு (கும்டா) இணைந்து வழங்கும் ‘சென்னை ஒன்’ செயலி மூலம் விருப்பம்போல் பயணம் செய்யும் ஆயிரம் ரூபாய் மற்றும் 2 ஆயிரம் ரூபாய் மின்னணு மாதாந்திர பயண அட்டை பெறும் வசதியை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் அறிமுகம் செய்து வைத்தார்.

இதுவரை மாநகர போக்குவரத்துக் கழக முக்கிய பஸ் நிலையங்களில் மாதாந்திர பயணச்சீட்டு மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வந்த இந்த பயண அட்டைகளை ‘சென்னை ஒன்’ செயலி வாயிலாக எங்கும், எப்போதும் செல்போனில் எளிதாக பெறக்கூடிய மின்னணு பயண அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த மின்னணு பயண அட்டைகள் வாங்கிய நாளில் இருந்து தொடர்ந்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும். இது முழுக்க, முழுக்க பணமில்லா பரிவர்த்தனை முறையில் இயங்குவதால் யு.பி.ஐ. அல்லது டெபிட், கிரெடிட் கார்டுகள் மூலம் பயண அட்டையை பெறும் வசதி உள்ளது.

## ஆன்லைன் கொள்முதல் தயாரிப்பு மோசடியால் ஏமாற வேண்டாம்

### திருநெல்வேலி எஸ்.பி. அறிவுறுத்தல்




**திருநெல்வேலி, நவ.29:** திருநெல்வேலி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது மொபைல் போன் மூலமாக *Online purchase Product fraud* (ஆன்லைன் கொள்முதல் தயாரிப்பு மோசடி) என்ற மோசடி மிக தீவிரமாக நடைபெற்று வருகிறது. பொருட்களின் தேவைகளுக்கு ஏற்ப தற்போது ஆன்லைன் மூலமாக பொருட்கள் வாங்கி வரும் வழக்கமாக இருந்து வரும் இந்த நேரத்தில் அதை மையமாக குறிவைத்து பல மோசடிகள் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக இ-வர்த்தக வியாபார தளத்தில் தேவைப்படும் பொருட்களை பதிவு செய்து வாங்கப்பட்டு வருகிறது. இதில் உங்களது கடைகளுக்கு அல்லது வீடுகளுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்காக இ-வர்த்தக வியாபார தளத்தில் பதிவு செய்து அதில் இருக்கும் நிறுவனத்தின் தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டால் தன்னிடம் தாங்கள் பதிவு செய்த பொருட்கள் குறைந்த விலையில் இருக்கிறது என கூறுவார்.

மேலும் அந்த நபர் உண்மையாகவே நிறுவனம் வைத்து நடத்தி கொண்டு இருப்பது போன்று போலியாக ஒரு நிறுவனத்தின் பெயர் மற்றும் போட்டோக்களை செல்பேசி மூலமாக உங்களுக்கு அனுப்பி வைப்பார். பின்னர் அதை உண்மையென நம்பி அந்த நபரிடம் பொருட்களை ஆர்டர் செய்தால் அதற்காக *Delivery charge* உடன் மொத்த பணத்தையும் முன்னதாகவே செலுத்த வேண்டுமென கூறி உங்களிடம் அதிக அளவில் பணத்தை பெற்றுக்கொண்டு பொருட்களை அனுப்பாமல் ஏமாற்றிவிடுவார்.

எனவே இ-வர்த்தக வியாபார தளத்தைப் பயன்படுத்தி பொருட்கள் வாங்கும் போது வர்த்தக வியாபாரியிடம் உள்ள தனிபட்ட முறையில் ஆன்லைன் பணபரிவர்த்தனை மூலமாக (*UPI App*) அல்லது வங்கி கணக்கின் மூலமாக பணத்தைச் செலுத்தாமல் இ-வர்த்தக வியாபார தளத்தில் உள்ள பணம் செலுத்தும் முறையில் பணத்தை செலுத்தினால், உறுதி செய்யப்பட்ட (*Verified bank account*) இ-வர்த்தக வியாபார தளம் உள்ளதால் பணம் திரும்ப கிடைக்க வாய்ப்பிருக்கிறது. மேலும் தனிப்பட்ட முறையில் யாரிடமும் பணத்தை அனுப்பி ஏமாற வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

இது போன்ற சைபர் கிரைம் நடைபெற்றால் சைபர் கிரைம் இணையதளத்தில் *www.cvbercrime.gov.in* அல்லது 1930 என்ற *Toll Free* எண்ணிற்கு அழைத்து உடனடியாக உங்களுடைய புகாரினை பதிவு செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கவிதை அரங்கம்!






என்னை புரிந்து
கொண்டமையால்
நீ என்னை
அவமானப்படுத்தினாய்,
என்னை
அவமானப்படுத்தியதனால்
நான் என்னை
புரிந்து கொண்டேன்.
என்னை எனக்கு
புரியவைத்தமையால்
உனக்கு நன்றி
சொல்கிறேன் ! அன்புள்ள
அவமானமே...!

எல்லா சூழ்நிலையும்
ஒரு நாள் கண்டிப்பாக
மாறும். ஓஹோ என்று
வாழ்ந்து ஒன்றுமில்லாமல்
போனவர்களும் உண்டு.
ஒன்றுமில்லாமல்
வாழ்ந்து ஓஹோ வென்று
போனவர்களும் உண்டு...!

வறுமையை கடந்து
பார் செல்வம் வரும்..
அழுகையை கடந்து
பார் தைரியம் வரும்..
தோல்வியை கடந்து
பார் வெற்றி வரும்..
அதன் பின்னே சென்று
பார் மகிழ்ச்சி வரும்..
அது நிச்சயம் உன்னை
தொடர்ந்து வரும்..

## வாழ்க்கை தத்துவம்



புரியாத வார்த்தை இருந்தும் பயன் இல்லை! புரியாத வாழ்க்கை வாழ்ந்தும் பயன் இல்லை....

அழுது நீ கோழையாகாதே! உனக்கு நண்பன் நீயே! உன்னை காப்பற்ற வருபவர் எவர் உளர்? நீயே உன் காவலன்....ஆதலினால் யாரையும் எதற்கும் எதிர்பார்க்காதே!

உனது வாழ்க்கைக்கு எல்லை அமைத்து வாழ்! ஆனால் எல்லைக்குள் ஒரு போதும் வாழ்க்கையை அமைத்து விடாதே....!

இதுவரை ஆராய்ச்சிக்கு உட்ப்படுத்தாத ஒன்று எது தெரியுமா அன்பு. காரணம் அன்பென்றால் அகிலமும் அடங்கிவிடும் என்பதனால்.

*ஒருவனின் வார்த்தை தரும் வலியை விட அவன் செய்யும் செயலின் வலி அதிகம்.

# திண்டாட்டம்



என்னாங்க!
சும்மாதான
உட்கார்ந்திருக்கீங்க..
மழை வர
மாதிரி இருக்கு!
மாடியில காயிற
துணியெல்லாம்
கொஞ்சம்
எடுத்துட்டு
வந்துடுங்க....!
அப்புறம் மளிகை
சாமான்லாம்
கொஞ்சம்
வாங்கனும்! நான்
சொல்றதை அப்படியே
எழுதிக்குங்க....
மளிகை கடைக்கு
போற வழியில,
டைலர் கடையில என்
சட்டைத்துணியை தைக்க
கொடுத்துடுங்க...
காய்கறி கடைக்கு
சாயங்காலமா
போயி காய்கறியை
வாங்குனாத்தான்
நாளைக்கு சமைக்க
முடியும்!
சரி... சரி... எல்லா
வேலைகளையும்
முடிச்சிடலாம்... கொஞ்சம்
சும்மா இருக்கீயா....
என்றான்; சுந்தர் தனது
மனைவி ஆண்டாளிடம்...
!
இப்படித்தான் தனது
மனைவி தன்னிடம்
இருபத்தி நான்கு
மணி நேரமும் நச
நசன்னு எதையாவது
சொல்லிகிட்டே
இருக்கா... இதை
நிறுத்தறதுக்குத்தான்
உங்கிட்ட ஒரு வழியே
கேட்டேன்... நீ
என்னடான்னா ஒன்னுமே
சொல்ல மாட்டேங்குற...
என்று தனது உயிர்
தோழன் ராகவனிடம்
யோசனை கேட்டான்
சுந்தர்...
நானும் யோசிச்சு,
யோசிச்சு பார்க்குறேன்...
சரியான யோசனை
ஒன்னும் கிடைக்க
மாட்டேங்குது!
வேணும்னா, இப்படி
பண்ணிப் பார்க்கலாம்...
உன் மனைவி என்னா
போன் வச்சிருக்காங்க?
என்னா போனுன்னு
கேட்டா எப்படி?
என்னா கம்பெனி
போனுன்னு கேட்கறியா?
பட்டன் செல்லா... டச்
செல்லா...!
ஓ.... அதை
கேட்கறியா? சாதாரண
பட்டன் செல்தான்
வச்சிருக்காப்புல.... !
அப்படின்னா... நீ செல்
போனை மாத்திக்
கொடு... அப்புறம் பாரு!
உன் மனைவி உன்
பக்கமே தலை வச்சு
படுக்க மாட்டாப்புல....!
என்னாப்பா... இப்படி
சொல்ற... செல்
போனுக்கும் இதுக்கும்
என்னா சம்பந்தம்
இருக்கு?
நான் சொன்னதை
முதல்ல செஞ்சு பாரு!
அப்புறமா வந்து என்னை
பாரு....
நண்பன் ராகவனின்
யோசனையை தலைமேல்
ஏற்றுக் கொண்ட
சுந்தர், தன் மனைவி
ஆண்டாளுக்கு,ஆண்ட்ராய்டு
போன் ஒன்றை
புதிதாகவே வாங்கி
கொடுத்து விட்டான்....
ஒரு மாதம் கழிந்த
நிலையில், எதெச்சையாக
கடைத்தெருவில்
நண்பர்கள் இருவரும்
சந்தித்துக் கொண்டனர்.
என்னப்பா...உன்
மனைவியோட நச்சரிப்பு
குறைஞ்சிருக்குமே
என்றான் ராகவன்...
அதை ஏன் கேட்குற...
பிள்ளையார்
பிடிக்க,குரங்கா மாறின
கதையா என் நிலைமை
ஆயிடுச்சு...என்றான்
சுந்தர்.
ஏன்..என்னா ஆனுச்சு?
என்று அதிர்ச்சியோடு
கேட்டான் ராகவன்..
அதாம்பா...நீ சொன்ன
யோசனைப்படி என்
மனைவிக்கு புதுசா டச்
போன் ஒன்னு வாங்கி
கொடுத்தன்..இப்ப
இருபத்து நான்கு மணி
நேரமும் என் மனைவி
வாட்ஸ்அப், யூடியூப்
பார்க்குறதுலேயே
காலத்தை ஓட்டிக் கிட்டு
இருக்கா...!
அதனால எனக்கு வேளா
வேளைக்கு சாப்பாடு
கிடைக்குறதே பெரும்
திண்டாட்டமா இருக்கு;
என்று அழுவாத குறையா
நண்பன் ராகவனிடம்
சுந்தர் புலம்பிக்
கொண்டிருந்தான்...

தமிழ்ச் செம்மல்
இளங்கோவன்.
நன்னிலம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

டாக்டர்: நம்ம ஆஸ்பிட்டல் விளம்பரத்துக்கு நச்சுன்னு ஒரு பஞ்ச் சொல்லுங்க

நர்ஸ்: கூட்டிட்டு வாங்க, தூக்கிட்டு போங்க.. பணம் எங்களுக்கு, பொணம் உங்களுக்கு..



# தினம் ஒரு சமையல்



## வாழைப்பழ கேக்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| வாழைப்பழம் | -3 |
| கோதுமை மாவு | -ஒரு கப் |
| நாட்டு சர்க்கரை | -அரை கப் |
| சுக்குத்தூள் | -ஒரு டீஸ்பூன் |
| ஏலக்காய் தூள் | -அரை டீஸ்பூன் |
| உப்பு | -ஒரு சிட்டிகை |
| பொடித்த நட்ஸ் வகைகள் | -அரை கப் |
| நெய் | -தேவையான அளவு |

செய்முறை:

வாழைப்பழ பணியார கேக் தயார் செய்வதற்கு தேவையான எல்லா பொருட்களையும் முதலில் எடுத்து வையுங்கள். எந்த வாழைப்பழத்தை வேண்டுமானாலும், இந்த கேக் செய்வதற்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். முதலில் மூன்று வாழைப்பழங்களை தோல் உரித்து துண்டு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். ஒரு மிக்ஸர் ஜாரை கழுவி எடுத்து, அதில் இதனை சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர் ஒரு கப் அளவிற்கு கோதுமை மாவை சேர்த்துக் கொள்ளுங்கள்.



கோதுமை மாவை எந்த கப்பில் எடுத்தீர்களோ, அந்த கப் அளவிற்கு அரை கப் நாட்டு சர்க்கரை சேர்க்க வேண்டும். நாட்டு சர்க்கரைக்கு பதிலாக நீங்கள் பொடித்த வெல்லத்தையும் சேர்க்கலாம். பின்னர் ஒரு டீஸ்பூன் அளவிற்கு சுக்குத்தூள் சேர்த்துக் கொள்ளுங்கள். அரை டீஸ்பூன் அளவிற்கு ஏலக்காய் தூள் சேர்க்க வேண்டும். ஏலக்காய் தூள் இல்லை என்றால், மூன்று ஏலக்காய்களை இடித்து சேருங்கள். சுவை கூடுவதற்கு ஒரு சிட்டிகை அளவிற்கு உப்பு போட்டு நன்கு கலந்து விடுங்கள்.

இப்போது அரை கப் அளவிற்கு தண்ணீர் சேர்த்து மிக்ஸியை இயக்கி, நன்கு நைசாக எல்லாவற்றையும் அரைத்துக் கொள்ள வேண்டும். கெட்டியான மாவு பதத்திற்கு வந்து விடும். பின்னர் அடுப்பை பற்ற வைத்து, அதில் ஒரு பேன் ஒன்றை வையுங்கள். தேவையான அளவிற்கு நெய் விட்டு பரப்புங்கள். பின்னர் இந்த மாவுடன் நீங்கள் விருப்பப்பட்ட அளவிற்கு நட்ஸ் வகைகளை சேர்த்துக் கொள்ளலாம்.

## சீந்தில் நன்மைகள்



சீந்தில், இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, செரிமானத்தை மேம்படுத்த மற்றும் தோல் நோய்களைக் குணப்படுத்த உதவுகிறது. மேலும், இது உடலுக்கு வலிமையைக் கொடுக்கும், நரம்பு மண்டல நடுக்கத்தைக் குறைக்கும், மற்றும் தசை வலிகளுக்குப் பலன் தரும். சளி, காய்ச்சல் போன்றவற்றுக்கும், இதய மற்றும் ஈரல் ஆரோக்கியத்திற்கும் இது நன்மை பயக்கும்.

சீந்திலின் முக்கிய நன்மைகள்

நீரிழிவு மேலாண்மை: இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது மற்றும் நீரிழிவின் அறிகுறிகளைக் குறைக்கிறது.

நோய் எதிர்ப்பு சக்தி: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

செரிமானம்: பசியின்மையைப் போக்கி, செரிமானத்தை மேம்படுத்தி, வயிற்று வலிகளைக் குணப்படுத்தும்.

உடல் வலிமை: உடலுக்கு வலுவைக் கொடுத்து, கை, கால் நடுக்கத்தைக் குறைக்கும். வாத நோய்கள் வராமல் தடுக்கும்.

தோல் நோய்கள்: தோல் நோய்கள், சரும வறட்சி மற்றும் உடல் சூட்டைக் குறைக்கும்.

சுவாசப் பிரச்சனைகள்: சைனசைடிஸ், சளி மற்றும் சுவாசப் பிரச்சனைகளுக்கு நன்மை பயக்கும்.

கல்லீரல் ஆரோக்கியம்: கல்லீரலைப் பாதுகாக்கவும் உதவும்.

இரத்த அழுத்தம்: இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவும்.

எப்படிப் பயன்படுத்துவது

சர்க்கரை நோய்க்கு: இலைகளை உலர்த்திப் பொடி செய்து, சுடுநீரில் கலந்து குடிக்கலாம்.

செரிமான பிரச்சனைகளுக்கு: தண்டுகளைக் காய வைத்து, பொடி செய்து கஷாயமாகக் குடிக்கலாம்.

உடல் வலிமைக்கு: இலையைச் சாறு எடுத்து, பசும் பாலுடன் கலந்து, சுக்குப்பொடி, பனங்கற்கண்டு சேர்த்துப் பருகலாம்.

சளி மற்றும் சினைசைடிஸ்: காய்ந்த கொடியைப் புகைத்து சுவாசித்தால் பல நோய்கள் குறையும்.

முடி வளர்ச்சி: வழுக்கைத் தலையில் சீந்திலைக் அரைத்துத் தேய்த்துக் குளிக்கலாம்.

# தனுஷின் புதிய படத்தில் இந்த மலையாள நடிகரா?.. இத்தனை கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதா?



தமிழ் சினிமாவில் உள்ளே நுழைந்த உடனே அனைவருக்கும் வெற்றி கிடைப்பது இல்லை.

அப்படி தனது அப்பா, அண்ணா சினிமாவில் இருந்தாலும் மோசமான விமர்சனங்களை எதிர்க்கொண்டு அதையே ஒரு சவாலாக எடுத்து இப்போது சிறந்த நாயகனுக்கான தேசிய விருதுகளை அள்ளியவர் தான் தனுஷ்.

இப்போது இவர் ஹிந்தியில் Tere Ishk Mein என்ற படத்தில் நடித்துள்ளார். ஆனந்த் எல் ராய் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள இப்படத்தில் கீர்த்தி சனோன் நாயகியாக நடித்துள்ளார், படமும் இன்று வெளியாகிவிட்டது.

படத்திற்கான ப்ரீ புக்கிங்கும் மாஸாக நடந்துள்ள நிலையில் வசூலும் நல்ல முறையில் வரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தற்போது நடிகர் தனுஷ், அமரன் பட புகழ் ராஜ் குமார் பெரியசாமி இயக்கத்தில் தனது 55வது படத்தில் நடிக்க இருப்பதாக தகவல்கள் வருகின்றன.

அந்த படத்தில் மலையாள சினிமாவின் டாப் நாயகன் மம்முட்டி நடிக்க இருப்பதாகவும் அவருக்கு இப்படத்திற்காக ரூ. 15 கோடி சம்பளம் பேசப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

விரைவில் இந்த புதிய படம் குறித்தான அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



## சினிமா

நடிகை ஸ்ரீலீலா சேலையில் கவர்ச்சி போஸ் கொடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட்.

கடற்கரையில் எடுத்த அழகிய ஸ்டில்களை பாருங்க.

# மாஸ் நடிகரிடம் கதை கூறியுள்ள லோகேஷ் கனகராஜ், யாரிடம் தெரியுமா?... கூட்டணி அமைந்தால் மாஸ் தான்

தமிழ் சினிமா கொண்டாடும் இளம் இயக்குனர்களில் ஒருவர் லோகேஷ் கனகராஜ்.

மாநகரம் என்ற படத்தை இயக்கி கவனத்தை பெற்றவர் அடுத்தே கார்த்தியை வைத்து கைதி என்ற படத்தை இயக்கி ரசிகர்களின் பேவரெட் இயக்குனராக மாறினார்.

அதன்பின் மாஸ்டர், விக்ரம், லியோ, கூலி என தொடர்ந்து படங்கள் இயக்கி வந்தவர் LCU எனப்படும் லோகேஷ் கனகராஜ் யுனிவர்ஸை உருவாக்கினார்.

லோகேஷ் இயக்கத்தில் அடுத்து ரசிகர்கள் கைதி 2 படத்திற்காக ஆவலாக வெயிட்டிங், அந்த படத்தின் வேலைகளை தொடங்கிவிட்டார் என தெரிகிறது.

கடந்த சில நாட்களாக லோகேஷ் கனகராஜ் கைதி 2 பட வேலைகளை தொடங்கிவிட்டார் என தகவல்கள் வந்துகொண்டிருக்க இப்போது



வேறொரு செய்தி வந்துள்ளது. அதாவது லோகேஷ் கனகராஜ் சமீபத்தில் மாஸ் நடிகரை சந்தித்து கதை கூறியுள்ளாராம்.

அவர் வேறுயாரும் இல்லை தெலுங்கு சினிமாவின் புஷ்பா பட வெற்றி நாயகன் அல்லு அர்ஜுன் தான்.

இப்போது அவர் அட்லீ இயக்கத்தில் பிரம்மாண்டத்தின் உச்சமாக தயாராகும் படத்தில் நடித்து வருகிறார், இதற்கு இடையில் லோகேஷ் கனகராஜ் கதையை தேர்வு செய்வாரா, இந்த புதிய கூட்டணி அமையுமா என்பதை பொறுத்திருந்து காண்போம்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**